2014 பிப்ரவரி 1]

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் கல்லூரிகள் 144 இருக்கின்றன. இந்த 144 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசு உதவிபெறுகிற கல்லூரிகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய 3,120 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தப் பணியிடங்களை தற்போது நிரப்பிக்கொண்டு வருகிறார்கள். இந்த வேளையில், அங்கு மக்களின் கோரிக்கையை ஏற்று, மாணவர்களுடைய கருத்தை ஏற்று, அரசுக்கு இதுபோன்ற கோரிக்கை வரும்பட்சத்தில், அரசு உதவிபெறும் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான கருத்துரு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

விதை ஆராய்ச்சி நிலையம்

***41288—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியிலுள்ள அரசு விதைப் பண்ணையில் அரசு விதை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் அரசு விதைப் பண்ணை ஏதும் தற்போது செயல்படவில்லை. எனினும், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஏத்தாப்பூரில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருவதால், தனியாக விதை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சத்திலான தொண்டர்களை கோடிகளாகப் பெருக்க வைத்த இயக்கத்தின் இமயமே, அன்பின் சிகரமே, மாசி மகம் தந்த ஜெயமே, மாசில்லா மக்கள் தவம் தந்த பலனே, களம் ஈன்ற பலமே, குன்றா புகழ் கொண்ட குணமே, தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழுகின்ற குணமே, அம்மா உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏத்தாப்பூர் ஆராய்ச்சிப் பண்ணையில் ஆமணக்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு விதை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் புதிய இரகம் தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றனவா, விவசாயிகளுக்கு ஆமணக்கு விதைகள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகள் வழங்கப்படுகின்றனவா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஏத்தாப்பூர் ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையில், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஆமணக்குப் பயிர்களுக்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று

2014 பிப்ரவரி 1]

வருகின்றன. இந்த ஆராய்ச்சிப் பண்ணை உயர் விளைச்சல் தரும் தரமான ஆமணக்கு விதைகளையும், மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகளையும் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வழங்கி வருகின்றது. இங்கு நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பயனாக, கடந்த 2013 ஆம் ஆண்டில் YCT1 *என்ற மரவள்ளிக் கிழங்கு இரகம் கண்டறியப்பட்டு, 250 விவசாயிகளுக்கு விதைக் கரணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 380 விவசாயிகளுக்கு விதைக் கரணைகள் வழங்குவதற்கான பதியங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர சாதகமான குணநலன்களைக் கொண்ட இரகத் தேர்வுகள்* H*740/92 மற்றும்* TCMS*2 ஆகிய இரண்டும் ஆராய்ச்சி நிலைகளில் உள்ளன.*

ஆமணக்குப் பயிர் தொடர்பான ஆராய்ச்சியைப் பொறுத்தவரையிலே, இந்நிலையத்திலிருந்து ஏற்கெனவே, YRCH1 *என்ற வீரிய ஒட்டு இரகம் அறிமுகப்படுத்தப்பட்டு, சுமார் 3,000 கிலோ நடப்பாண்டில் மட்டும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டிற்கு சுமார் 6,000 கிலோ விநியோகம் செய்வதற்கேற்ற வகையில், விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

மேலும், ஆராய்ச்சியில் வீரிய ஒட்டு YRCH *1116 தேர்வு நிலையிலுள்ளது. ஏத்தாப்பூர் ஆராய்ச்சி நிலையத்தில் விதை ஆராய்ச்சி உட்பட ஏனைய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுவதோடு, தரமான விதைகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்த வசதிகளை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான ஆமணக்கு விதைகளும், தரமான மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகளும் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2014 பிப்ரவரி 1

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில், பூசலாங்குடி, கீராண்டியனூரில் ஓர் அரசு விதைப் பண்ணையும், நெடும்பலம் ஊராட்சியில் ஓர் அரசு விதைப் பண்ணையும், சேகல் ஊராட்சி, தீயந்தான்பட்டினத்தில் ஓர் அரசு விதைப் பண்ணையுமாக மூன்று பண்ணைகளில் 212 ஏக்கரில் நெல் சாகுபடி சிறப்பாக நடந்து வருகிறது. அந்த விதைப் பண்ணைகளை ஒன்றிணைத்து திருத்துறைப்பூண்டியில் ஒரு நெல் ஆராய்ச்சி நிலையம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தரமான விதைகளை உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பண்ணைகளில் நெல் விதைகளை உலர்த்துவதற்கான சிமென்ட் களம் இருந்தும், அது மோசமான நிலையில் இருக்கிறது. அதையும் சரி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதை ஆராய்ச்சிப் பண்ணையைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே நம்முடைய வேளாண் பல்கலைக்கழகத்தின் சார்பில் 38 ஆராய்ச்சிப் பண்ணைகள் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன. அதேபோல, தேவையான அளவுக்கு அரசு விதைப் பண்ணைகளும் இருந்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையிலே, அங்கே சில குறைபாடுகள் இருக்கின்றன. களம் இருக்கின்றது, இருந்தாலும்கூட அது சரியாக இல்லை, சரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வருகின்ற காலகட்டத்தில் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.